**அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1996 இன் 13 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் (283 ஆம் அதிகாரம்) 18 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

-----------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் 3

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக்கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக்கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32,980,807 நிலுவையாகவுள்ள மொத்தத் தொகையான அங்கத்தவர் கட்டணங்கள் மற்றும் கடன் தவணைப்பணங்கள் மற்றும் கடன் வட்டி நிலுவையினை செலுத்தத் தவறிய 500 உறுப்பினர்கள் இருந்தனர். நிலுவையாகவுள்ள மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பங்களிப்புக்களின் நிலுவைகள், கடன் தவணைப்பணங்களின் நிலுவைகள் மற்றும் கடன்வட்டி நிலுவைகள் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. ஆகையால், அவைகள் நிலுவை மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அனைத்து கணக்குகளையும் அட்டுறு அடிப்படையில் கணக்கிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | நிலுவை உறுப்பினர் கட்டணங்கள், கடன் தவணைப் பணங்கள் மற்றும் வட்டிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3 (1) இன் பிரகாரம், வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. ரூபா 6,815,743 வட்டி வருமானமானது மீளாய்வாண்டிற்காக பெற வேண்டியதாகவிருந்தததுடன் சொல்லப்பட்ட வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டமையால் இது நிதிக்கூற்றுக்களில் நிலுவை மீதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அனைத்து கணக்குகளையும் அட்டுறு அடிப்படையில் கணக்கிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | பெறவேண்டிய வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | ரூபா 402,499 தொகையான 13 கடன்பட்டோர்களின் நிலுவை மீதியை பதிவழிப்புச்செய்வதற்கு நிதிக்குழு 2021 ஏப்ரல் 20 இல் சிபாரிசு செய்தது. மீளாய்வாண்டின் போது அத்தகைய கடன்பட்டோர்களில் 07 கடன்பட்டோர்களுடன் தொடர்புடைய ரூபா 175,404 மீதி மாத்திரம் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. | நிதிக்குழுவின் சிபாரிசுகள் மாதாந்த முகாமைத்துவக் குழுக்கூட்டத்தினை அனுமதித்த பின்னர் அமுல்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, மாதாந்த முகாமைத்துவக் குழுக்கூட்டம் அத்தகைய கடன்பட்டோர்களிடமிருந்து ஏழு பேரின் கடன் மீதியாக ரூபா 175,403.77 இனை பதிவழிப்புச்செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தமையால் அந்தத் தொகை பதிவழிப்புச் செய்யப்பட்டது. | கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட வேண்டியதுடன் அறவிடப்பட முடியாத கடன்பட்டோர் மீதிகள் முறையாக பதிவழிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 136/21/04 சபைப்பத்திரத்தின் பிரகாரம், 08 ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 474,367 மொத்தத் தொகை 2021 திசெம்பர் 31 அளவிலும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய மீதிகள் உரிய உறுப்பினர்கள் கணக்குகளில் 136/21/04 சபைப்பத்திரத்தின் பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் தனிப்பட்ட கணக்கின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சங்கத்திடமிருந்து ஓய்வுபெற்ற உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு, உறுப்பினர் கட்டணங்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் தவணைப்பணங்களின் நிலுவைகள் ரூபா 26,165,743 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அத்தகைய நிலுவைகளை உள்ளடக்கப்படாததற்கான கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பங்களிப்பு, கடன் தவணைப்பணங்கள் மற்றும் கடன் வட்டிகளின் நிலுவைகள் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டது. ஆகையால், நிலுவையாகவுள்ள மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அனைத்து கணக்குகளையும் அட்டுறு அடிப்படையில் கணக்கிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. | சங்கத்தால் நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் பயன்படுத்தப்பட்ட தத்துவங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி ரூபா 85,185,156 ஆகவிருந்தது. அத்தகைய சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கான வருடாந்த கணக்கெடுப்பு சபைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பௌதீக உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கான வருடாந்த கணக்கெடுப்பு சபைகளை மேற்கொள்வதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சங்கத்தின் பௌதீக சொத்துக்களின் உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கான வருடாந்த கணக்கெடுப்பு சபைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | பல்வேறுபட்ட தரப்பினர்களிடமிருந்து சங்கத்தால் ரூபா 335,729 பெறுமதியான காசோலைகள் பெறப்பட்டதுடன் அத்தகைய காசோலைகள் 2021 திசெம்பர் 31 இலும் காலவதியடைந்திருந்தது. இரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் பிரதிநிதித்துவம் செய்த கடன்பட்டோர்கள் மீள்கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து தேறப்படாத காசோலைகளை அகற்றுவதற்கும் அதற்காக புதிய காசோலைகளை வரைவதற்கும் திகதியை நீடிப்புச்செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இரத்துச்செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி கடன்பட்டோர்களாக கணக்கிற்கு எடுத்துவரப்பட வேண்டும். |
| (ஏ) | மரணமடைந்த உறுப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய பங்களிப்புக்களின் மீதி ரூபா 19,421,207 ஆகவிருந்ததுடன் அத்தகைய மீதிகளுடன் தொடர்புடைய தனிப்பட்ட மீதிகளின் பட்டியல்கள் மற்றும் அதன் நேரப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக்கணக்கில் மரணமடைந்த உறுப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய பங்களிப்புக்கள் மற்றும் வட்டியும் மாத்திரமல்லாமல் ஓய்வுபெற்ற மற்றும் பங்களிப்புக்களை பெறுகின்ற உறுப்பினர்களிடமிருந்து பெறுகின்ற பங்களிப்புக்கள் மற்றும் வட்டியும அந்தக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது (6(அ)1). அதன் நேரப் பகுப்பாய்வும் உள்ளடக்கப்டுகின்றது. | மரணமடைந்த உறுப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய தொகைகளுடன் தொடர்புடைய தனிப்பட்ட மீதிகளின் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | (சீஎச்பீஏ டிபீ) இன் கீழ் உறுப்பினர்கள் இல்லாதோருக்கு ரூபா 9,346,917 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. அத்தகைய கொடுப்பனவுகளிலிருந்து, ரூபா 8,162,535 இற்கான கொடுப்பனவுகளிற்கான 252 கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களில் பற்றுச்சீட்டு இலக்கங்கள், காசோலை இலக்கங்கள் மற்றும் திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் | உறுப்பினரல்லாதோரின் பெறுகைகளுக்காக உரிய நிறுவனங்களிற்குரிய கொடுப்பனவு தொடர்பாக கொடுப்பனவு பற்றுச்சீட்டுடன் வழங்கப்படுகின்ற காசோலையொன்று வகைப்படுத்தப்படாத அனுப்பல் கணக்கிற்கு பதியப்பட்டது. பிந்தி இனங்காணப்பட்ட உரிய அங்கத்தவர் கணக்குகளுக்குரிய பெறுகைகளுக்கான பதிவுகளை மேற்கொள்கையில் | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களிற்காக செலவீனம் கணக்கிடப்பட்டிருந்த துடன் அனைத்து உரிய விபரங்களும் பற்றுச்சீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகள் மாத்திரம் குறிக்கப்பட்டிருந்தது. ஆகையால் கொடுப்பனவிற்கான கணக்காய்வினை திருத்திகரமாக மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. | கொடுப்பனவு பற்றுச்சீட்டானது வகைப்படுத்தப்படாத அனுப்பல் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு குறிப்பாக பயன்படுத்தப்பட்டது. காசோலையானது இதற்காக வழங்கப்படாமையால் காசோலை இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இது கணக்காய்வு ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டவாறு முறையே ரூபா 13,775,717 மற்றும் ரூபா 5,344,881 ஆன செலவு வைக்கப்பட்ட மற்றும் வரவுவைக்கப்பட்ட தொகைகள் தொடர்பில் பொதுப்பேரேடுகளுள்ளது. | |
| (ஒ) | பொதுப்பேரேட்டுக்களிலிருந்து வகைப்படுத்தாத அனுப்பல் கணக்கிற்கு ரூபா 13,775,717 தொகை செலவுவைக்கப்பட்டதுடன் ரூபா 5,344,881 தொகை வரவுவைக்கப்பட்டது. அத்தகைய பதிவுகளிற்கான முறையான பொதுப்பேரேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களில் குறிப்பிட்டவாறு ரூபா 13,775,717 மற்றும் ரூபா 5,344,881 தொகையான முறையே வரவுவைக்கப்பட்ட மற்றும் செலவுவைக்கப்பட்ட தொகை தொடர்பான பேரேடுகள் காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களின் மூலம் பொதுப்பேரேடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான அனைத்து பொதுப்பதிவுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வகைப்படுத்தப்படாத திரும்பல் கணக்கில் ரூபா 7,395,147 மீதியொன்றிருந்தது. அதற்காக, தனிப்பட்ட மீதியை உள்ளடக்குகின்ற நேரப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தப்படாத திரும்பல் கணக்கின் நேரப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. | வகைப்படுத்தப்படாத திரும்பல்களிற்கான தனிப்பட்ட மீதிகளுடான நேரப்பகுப்பாய்வு பேணப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 இலிருந்து 2021 வரையான காலப்பகுதியின் போது மரணமடைந்த 88 உறுப்பினர்கள் தொடர்பில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,725,000 மொத்தத் தொகை செலுத்த வேண்டும். மீளாய்வாண்டின் ரோது 04 உறுப்பினர்கள் தொடர்பில் ரூபா 300,000 மாத்திரம் செலுத்தப்பட்டது. | உறுப்பினர்கள் மரணமடைந்து அறிக்கையிட்ட பின்னர் மானியங்கள் 2 மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் தேவையான ஆவணங்கள் மற்றும் பணம் பெறும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதிகளை மானியங்களின் உரிமையாளர்கள் முறையாக | சங்கத்தின் உறுப்பினர்களின் நாளதுவரையாக்கப்பட்ட சுயவிபரத்தினை பராமரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்காமையால் மானியங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. உறுப்பினர்களுக்கு உரியகாலத்தில் அறிவிக்கப்பட்டதுடன் உரிய கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பழைய உறுப்பினர்களில் விதவைகள் மற்றும் பிள்ளைகளில் பலர் வெளிநாடுகளில் தங்குபவர்களாக இருந்தமையால் அவர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட ஆவணங்களை பெறுவதற்கு கடினமாகவுள்ளது. இந்தத் தாமதத்தை குறைப்பதற்கு வாரிசு வேட்புமனுப் படிவங்கள் வாரிசல்லாதோருக்கு விநியோகிக்கப்பட்டுவருகின்றது. | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1891 இன் 5 ஆம் இலக்க யாப்பின் 21 ஆம் பிரிவு | வருடாந்த பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களின் 2/3 ஆகக்குறைந்த பெரும்பான்மை வாக்கினால் புதிய விதிகள் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட விதிகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் ஒவ்வொரு வருடாந்த பொதுக்கூட்டத்திலும் 2/3 பெரும்பான்மையின் அடிப்படையில் திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கத்தின் உறுப்புரிமை 14,384 ஆகவிருந்ததுடன் 2019 இல் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு 1,903 உறுப்பினர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். | வருடாந்த பொதுக் கூட்டத்தின் திகதி புதினப் பத்திரிகைகளில் இரண்டு தடவைகள் அறிவித்திருந்ததுடன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடாந்த அறிக்கை அனுப்பப்பட்டது. அத்துடன், வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு ஒரு கிழமைக்கு முன்னர் ஒவ்வொரு உறுப்பினர்களும் குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) மூலம் அறிவிக்கப்பட்டது. அத்துடன், மேலதிக உறுப்பினர்களை கவருவதற்காக கூட்டத்திற்கு சமூகமளிக்கின்ற ஒவ்வொரு உறுப்பினரிற்கும் போக்குவரத்துப்படி கொடுக்கப்படுமென்பதுடன் உறுப்பினர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்காக மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போதுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு மூலம் பிரேரணைகள் | உறுப்பினர்களில் அதிகூடியோர் சங்கத்தின் பொதுக்கூட்டங்களிற்காக ஒன்றுகூட வேண்டும். |

எடுக்கப்பட்டது. வருடாந்த பொதுக்கூட்டத்தை மேற்கொள்வதற்கு தேவையான அதிகுறைந்த எண்ணிக்கை 60 ஆகவுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 64,333,050 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 53,976,946 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,356,104 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதலீட்டு வருமானம் 67 சதவீதத்தால் அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொடுக்கப்பட்ட தினத்தில் தனித்தனியாக மொத்த நிலுவை கடன் தவணைப்பணங்கள் மற்றும் வட்டியினைப் பெறுவதற்கு கணக்கீட்டு மென்பொருள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. . | கணனி மென்பொருள் முறைமையில் தனித்தனியாக நிலுவைக்கடன்கள், தவணைப்பணங்கள் மற்றும் வட்டியை தனித்தனியாக இனங்காணும் வகையில் கணனி முறைமையை முன்னேற்றுவதற்கு எதிர்காலத்தில் முயற்சிகள் எடுக்கப்படும். | கணனி முறைமை உடனடியாக முன்னேற்றப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் போது 374 புதிய உறுப்பினர்கள் இணைந்திருந்ததுடன் 198 உறுப்பினர்கள் ஓய்வுபெற்றிருந்ததுடன் 101 உறுப்பினர்கள் மரணமடைந்திருந்தனர். அதற்கிணங்க, மீளாய்வாண்டின் போது உறுப்பினர்களின் தேறிய அதிகரிப்பு 75 உறுப்பினராகவிருந்தது. | புதிய உறுப்பினர்கள் ஆட்சேர்ப்பானது தற்போதைய கொவிட் 19 பரவல் நிலைமையால் குறைவாகவிருந்தது. பல்வேறு வகையான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். | சங்கத்தின் உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது 13 முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடைபெற்றது. குழு உறுப்பினர்களில் இரண்டு உறுப்பினர்கள் முறையே 9 மற்றும் 6 கூட்டங்களில் பங்குபற்றியிருக்கவில்லை. அத்துடன், நிதிக்கணக்காய்வு மற்றும் கொடுப்பனவுக் குழுவில் 12 கூட்டங்களை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 06 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றது. | 1891 இன் 5 ஆம் இலக்க ஆணைச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான பொது அதிகாரசபை 474 இன் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் இல்லாமல் 3 தொடர்ச்சியான மாதாந்தக் குழுக்கூட்டத்திற்கு பங்குபற்றாத உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்துச்செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. ஆகையால், 2022.03.30 இல் நடைபெற்ற மாதாந்த முகாமைத்துவக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு திரு டபிள்யூ.ஏ.டி.பொன்சேகா 3 பிரதான முகாமைத்துவக்குழுக்கூட்டத்தில் தொடர்ச்சியாக பங்குபற்றாமையால் அவரின் உறுப்புரிமையை இரத்துச்செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. குழு உறுப்பினர் டி.எச்.விஜயதிலக மூன்று குழுக்கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக பங்குபற்றியிருக்கவில்லை. 2021 இல் ஏற்பட்ட கொவிட் பரவல் நிலைமையால் அலுவலர்கள் கூட்டத்திற்கு பங்குபற்றுவது கடினமாகவிருந்தமையால் குழுக்கூட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு நடைபெற்றிருக்கவில்லை. | குழுக்கூட்டங்களில் குழுஉறுப்பினர்கள் பங்குபற்றலானது முறையாக இருக்கவேண்டுமென்பதுடன் திட்டமிடப்பட்டவாறு கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆகவிருந்ததுடன் பிரதான கணக்காய்வாளர் பதவி வேண்டப்பட்டவாறு ஆட்சேர்ப்பு அடிப்படையில் வெற்றிடமாகவிருந்தது. | முகாமைத்துவக்குழுவானது பிரதம கணக்காய்வாளர் பதவியை உருவாக்குவதற்கும் தேவையான நேரத்தில் வெளித்தரப்பினரிடமிருந்து தகுதிவாய்ந்த உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதற்கு 2020.08.28 இல் தீர்மானித்திருந்தது. முகாமைத்துவக் குழுவானது வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பதவிகளை வேலைக்கமர்த்துவதற்கான தேவைப்பாடுகளை கருதி வேலைக்கமர்த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |